மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி போடுங்கள், கேள்வி நேரத்தின் போது ஆலோசனை சொல்வதற்கில்லை.

திரு. கே. விநாயகம் : கேள்விக்குத்தான் வருகிறேன். இந்த சர்க்கார் வந்த பிறகு ஏன் அந்த சிட்டி டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டியை ரத்து செய்துவிட்டார்கள்? நாங்களே எல்லாம் செய்கிறோம் என்று கூறிக்கொண்டு வருகிறார்களே, இந்த சீர் கேடான நிலைமைக்கு யார் காரணம் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம். மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

Village Officers in Panchayat Councils

* 252 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether Village Officers are also Members of the Village Panchayats; and

(b) if so, whether they are functioning as ex-Officio Members ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE : May I know whether it is a fact that the Village Officers have represented that they could also automatically have membership of the Village Panchayat, whether they also represented number of grievances to Hon. Minister and if so, will the Hon. Minister be able to give us details of the grievances, the action taken on them and the number of grievances that have been redressed by the Ministry?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது பற்றிய விவரங்கள் எதுவும் தற்போது இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

கிராம சேவக்குகளுக்குக் குடியிருப்புகள்

* 253 வின—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ஆம் ஆண்டு முடிய தமிழகத்தில் மாவட்ட வாரியாக எத்தனை கிராம சேவக்குகளுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு உள்ளன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மொத்தம் 562 பேர் களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, 1969–70-லே எத்தனை பேர்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டது? கட்டி முடிக்கப்படாமல் இருக்கும் கட்டடங்கள் எத்தனை? எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று தனியாகத் திட்டம் இருக்கிறதா?